# தகவல் பாலம்

## தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

## OUR LADY OF GOOD HEALTH PARISH

Volume 1, Issue 9 November 2019


### *PASTORAL STAFF:*

**Fr. Charles W. Collins**
*Pastor*

Maureen Rajadurai
*Secretary*

### *MASS SCHEDULE:*

| | |
|---|---|
| **Sunday:** | **12:30 pm & 4:30 pm** |
| **Tuesday & Wednesday:** | **7:30 pm** |
| **First Friday:** | **7:30 pm** |

### *OFFICE HOURS:*

| | |
|---|---|
| **Monday:** | **Closed** |
| **Tuesday - Friday:** | **9:00 am – 6:00 pm** |
| **Saturday:** | **9:00 am – 3:00 pm** |
| **Sunday:** | **11 am – 4 pm;**<br>**5:30 pm – 7 pm** |


### *OUR LADY OF GOOD HEALTH PARISH*

**131 Birchmount Road,**
**Scarborough, ON. M1N 3J7**
***(Birchmount & Danforth Ave.)***

| | |
|---|---|
| **Phone:** | **416-264-OLGH (6544)** |
| **Fax:** | **416-264-6545** |
| **Email:** | **Office@olghtamilparish.com** |
| **Website:** | **www.olghtamilparish.com** |


### வாரநாள் திருப்பலிகள்

**செவ்வாய்க்கிழமை:** தூய அந்தோனியார் நவநாள் மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலியும்

**புதன்கிழமை:** சதாசகாய அன்னை நவநாள் மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு திருப்பலியும்

### முதல் வெள்ளி - நற்கருணை வழிபாடு

மாலை 7:00 மணிக்கு செபமாலையும் 7:30 மணிக்கு நற்கருணை வழிபாடும் தொடர்ந்து திருப்பலியும்

### திருமுழுக்கு அருட்சாதனம்

**பிரதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3:00 மணி (மார்கழி 22, 29, தை 5 நாட்களில் நடைபெறமாட்டாது)**
பெற்றோர்கள் திருமுழுக்கு அருட்சாதன ஆயத்த வகுப்பில் பங்கெடுப்பது முக்கியமானது.
ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற முதல் செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6:00 மணி தொடக்கம் மாலை 7:00 மணி வரை எமது பங்கில் ஆயத்த வகுப்புகள் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

### ஒப்புரவு அருட்சாதனம்

அனைத்து திருப்பலிகளின் முன்பும் பின்பும் அல்லது முன்னேற்பாட்டுடன் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கிறிஸ்து பிறப்பு விழா**விற்கு ஆயத்தமாக **மார்கழி 10, செவ்வாய்க்கிழமையும், மார்கழி 11, புதன்கிழமையும்** இரவு 7:30 மணி திருப்பலிக்கு முன்பும் பின்பும் மற்றும்

**மார்கழி 20, வெள்ளிக்கிழமை மாலை 6:00 தொடக்கம் இரவு 9:00 மணி வரை** ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.



**FOREVER LOST. FOREVER CHANGED. WE CARE. SO WE REMEMBER.**

**NOV 11 - REMEMBRANCE DAY**

*Lest We Forget*

வெள்ளி விழா
1994 - 2019

## திருமண அருட்சாதனம்

தயவுசெய்து பங்குத்தந்தையை காலம் தாமதிக்காமல் தொடர்பு கொள்ளவும். ஒரு வருடத்திற்கு முன்னர் அறிவிப்பது விரும்பத்தக்கது. ரொறன்ரோ மறைமாவட்டத்தினால் ஒழுங்குசெய்யப்டுகின்ற திருமண ஆயத்த வகுப்புகளில் பங்குபற்றி சான்றிதழைப் பெற்றுக்கொள்வதும் அவசியமானது.

## முதல் நன்மையும் உறுதி பூசுதலும்

2020 ஆம் ஆண்டில் எமது பங்கில் முதல் நன்மையும் உறுதி பூசுதலும் பெற விரும்புகின்ற பிள்ளைகள் தமது பாடசாலைகளில் நடைபெறவிருக்கின்ற ஆயத்த வகுப்புக்களில் பங்கேற்பது முக்கியமானது. கத்தோலிக்க பாடசாலைகளில் கல்விபயிலாத பிள்ளைகள் பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## திருவழிபாட்டுப் பாடல்கள்

எமது பங்கின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவின் நினைவாக **பரமனுக்கு பாமாலை III** எனும் திருவழிபாட்டுப் பாடல்கள், புதிய திருப்பலிச் செபங்கள் அடங்கிய நூல் வெளியிடப்படுகின்றது. அதில் இறந்து போன உங்களுடைய பெற்றோர், பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்களின், நண்பர்களின் நினைவாக புகைப்படத்துடன் கூடிய பக்கம் ஒன்றை அந்நூலில் பதிவிட விரும்பினால் பங்கு அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## கார்த்திகை மாதம் - இறந்த அனைத்து விசுவாசிகளின் நினைவு

கார்த்திகை மாதம் முழுவதும் இறந்த அனைத்து விசுவாசிகளின் நினைவு கூருமுகமாக ஒவ்வொரு **செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இரவு 7:30** மணிக்கு நினைவுத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

**கார்த்திகை 29, வெள்ளிக்கிழமை இரவு 7:00** மணிக்கு தமிழ் ஆங்கில மொழிகளில் பொது வழிபாடாக இடம்பெறும். இத்திருப்பலியில் உங்களின் உறவுகளுக்காக விசேடமாக மன்றாட அவர்களின் பெயர்களை அதற்கான பதிவுப்புத்தகத்தில் எழுதிவிடவும்.

## கார்த்திகை மாத திருவிழா திருப்பலிகள்

**ஞாயிறு 17 தூய சிசீலியா பெருவிழா** - தூய ஆரோக்கிய அன்னைப் பங்குப் பாடகர் குழு

**ஞாயிறு 24 கிறிஸ்து அரசர் பெருவிழா**




## சிறுவர் ஒளிவிழா 2019

**மார்கழி 15, ஞாயிற்றுக்கிழமை**
நடைபெறவிருக்கின்ற சிறுவர் ஒளிவிழாவிற்கு ஆயத்தமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் மதியம் 2:00 மணி தொடக்கம் சிறுவர் நிகழ்ச்சிகளுக்கான பயிற்சிகள் நடைறெறுகின்றன. உங்களது பிள்ளைகளும் அதில் பங்குபற்ற விரும்பினால் தாமதிக்காமல் அவர்களைப் பயிற்சிகளுக்கு அழைத்து வருமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## 2019 BISHOP'S ALTER SERVER AWARD

Saturday Oct 19, 2019, the following Alter Servers received the "Bishop's Alter Server Award for Service" for the Eastern Pastoral Region:

**Akilan Anton, Amelia Angelo,**
**Anushka Vaz, Anushmi Jeyakumar**
**Anushvi Jeyakumar, Calton Louis Paul**
**Jessica Robert Princely, Jethuson Antonbenedict**
**Larisha Louis Paul, Leroson Vergilkumaran**
**Rebecca Robert Princely, Risha Kallistas**

Congratulations for having been chosen to receive this honour and thank you for your faithful service!

## இறந்த அனைத்து விசுவாசிகளுக்கும்

நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும் ஆண்டவரே முடிவில்லாத ஒளி அவர்கள் மேல் பிரகாசிக்கக்கடவதாக. சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக!

இறந்த அனைத்து விசுவாசிகளும் தங்களின் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுதலை பெற்று நிலையான விண்ணக வாழ்வை பெற்று கொள்ளவேண்டும் என்று இம்மாதத்தில் நாம் அனைவரும் சிறப்பாக மன்றாடுவோம்.